செ.வெ.எண்: 432/2020 நாள்: 03.11.2020

**ஆரணியில் நடைபெற்ற சிறப்பு முகாமில்**
**260 மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய அடையாள அட்டை**
**மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் வழங்கினார்...**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பாக இன்று (03.11.2020) நடைபெற்ற சிறப்பு அடையாள அட்டை வழங்கும் முகாமில் 472 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 260 மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய அடையாள அட்டை, 2 நபர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள், 4 நபர்களுக்கு சக்கர நாற்காலி, 5 நபர்களுக்கு காதொலி கருவி, ஆகிய நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. சரவணன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்திடவும், அவர்களின தேவைகளை கண்டறிந்து பூர்த்தி செய்திடவும் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் புதிய அடையாள அட்டை பெறுவதற்கு ஒவ்வொரு வாரமும் திங்கள் தோறும் மாவட்ட ஆட்சியர் வளாக மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் நடைபெறும் முகாமில் வழங்கப்பட்டு வருகிறது. ஆரணி, வந்தவாசி, செங்கம், கீழ்பென்னாத்தூர், வெம்பாக்கம், தண்ராமபட்டு, செய்யார், ஜமுனமுத்தூர், மற்றும் சேத்துபட்டு ஆகிய வட்டங்களுக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளிகள், வெகு தொலைவிலிருந்து மாவட்ட ஆட்சியரகம் வருகை புரிந்து புதிய அடையாள அட்டை பெறுவதற்கு பல்வேறு சிரமங்கள் உள்ளதை கருத்தில் கொண்டு தொலைவில் உள்ள மேற்கண்ட வட்டங்களில் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. இதன்படி, இன்று (03.11.2020) ஆரணி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம் தொடங்கப்பட்டுள்ளது. இன்று நடைபெற்ற சிறப்பு முகாமில் 472 விண்ணப்பங்கள் பெறப்பட்டு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, 260 மாற்றுத்திறனாளிகளுக்கு உடனடியாக புதிய அடையாள அட்டை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, வரும் 05.11.2020 வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகம், 07.11.2020 செய்யார் வட்டாட்சியர் அலுவலகம், 10.11.2020 கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், 12.11.2020 வெம்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகம், 18.11.2020 தன்டராம்பட்டு வட்டாட்சியர் அலுவலகம், 19.11.2020 செங்கம் வட்டாட்சியர் அலுவலகம், 24.11.2020 ஜமுனாமுத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், 25.11.2020 சேத்துப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம் நடைபெறுகிறது. சிறப்பு முகாமிற்கு வரும் மாற்றுத்திறனாளிகள் குடும்ப அட்டை (ஸ்மார்ட் கார்டு) நகல், ஆதார் அட்டை நகல், 4 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் கொண்டு வர வேண்டும். இச்சிறப்பு முகாமில் புதிய அடையாள அட்டை தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள் மட்டும் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**